**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 205/2015**

| | | DEPOSITION OF WITNESS | DW.2 |
|---|---|---|---|
| NAME | ரமணி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 03.03.2026.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை :-**

நான் இந்த வழக்கில் 3ஆம் நபர். எனது தரப்பு சாட்சியாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார் என்றால் பன்னீர்செல்வம் அழைத்து வந்தார். வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் நான் சொல்லி வக்கீல் தயார் செய்தார். வாக்குமூலத்தில் கருப்பாயிக்கு அரசாங்கத்தால் சொத்து வந்ததாக சொல்லியுள்ள விவரம் எப்படி எனக்கு தெரியும் என்றால் ஊரில் சொல்லி தெரியும்.

2. இந்த வழக்கை யார் யார்மீது போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாக்குமூலத்தில் பிரதிவாதி என குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வழக்கறிஞரால் போடப்பட்டது என்றால் ஆமாம். தாவா சொத்தின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு பற்றி விவரங்கள் தெரியாது என்றாலும் வழக்கறிஞர் தயார் செய்து வைத்திருந்த வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் எனது முதல் விசாரணை வாக்குமூலம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.